[Sri K. Anbazhagan] [17th July 1957

மேலும், இப்போது அந்தக் கல்லூரியில் படித்துத் தேர்ச்சி பெற்று வெளி வருபவர்கள் உடனடியாக அரசாங்க உத்தியோகங்களுக்குப் போக முடியவில்லை. காரணம், அவர்கள் (ரெஜிஸ்டர்) பதிவு செய்து கொள்ள முடிவதில்லை. ஆகவே அவர்கள் கல்லூரியில் படித்துத் தேர்ச்சி பெற்ற பிறகு உடனடியாக ரெஜிஸ்டர் (பதிவு) செய்து கொள்வதற்கு வகை செய்

வதற்கான மருத்துவக் குழுவை நியமிக்க வேண்டும் என்று விரும்பு கிறேன். சென்ற ஆண்டிலேயே அதற்கான சட்டம் இயற்றப்பட்டும் அப்படிப் பட்ட ஒரு குழு இன்னும் நியமிக்கப்படவில்லை. அது எப்போது நியமிக்கப்படும் என்றும் தெரியவில்லை. அந்தக் குழுவை உடனடியாக நியமிக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

இறுதியாக நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டு மக்களின் எழ்மை நிலையையும், எளிய வாழ்க்கைத்தரத்தையும் மனதில் கொண்டு பார்க்கும்போது, ஹோமியோபதி மருத்துவம் அவர் களுக்குக் குறைந்த செலவில் சிறந்த பலனளிக்கக்கூடிய வைத்தியமாக இருக்கிறது என்பது தெரிகிறது. வேறு வைத்தியங்களால் தீராத பல நோய்கள் சித்த வைத்தியத்தால் தீருவது போல, ஹோமியோபதியாலும் தீருகின்றன. ஆகவே தக்கவாறு ஆராய்ந்து பார்த்து ஹோமியோபதியை அபிவிருத்தி செய்து கிராமம் கிராமமாகப் பரப்ப வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் கூறிய இந்தக் காரியங்களை யெல்லாம் நிறைவேற்றி வைத்திய துறையிலுள்ள குறைகளை நீக்கினால்தான் அரசாங்கத்தின் சுகாதார வைத்திய இலாக்காவிற்கு வந்திருக்கும் நோயும் நீங்கும் என்பதையும் தெரிவித்து உரையை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: **The House will now adjourn and meet again at 9 a.m. on Thursday, the 18th July 1957.**

2-07 p.m. **The House then adjourned.**

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS